மக்களாட்சியை மரணக்குழியில் தள்ளிய தேர்தல் ஆணையம்!

அன்றே எச்சரித்த ஜனநாயகக் காவலர் மு.க.ஸ்டாலின்!

இந்தியக் குடிமக்களின் வலிமையான அதிகாரம் வாக்குரிமை. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு இந்தியனும் பயன்படுத்தக்கூடிய ஜனநாயக ஆயுதம் அது. மக்கள் நினைத்தால் எந்த ஒரு கட்சியையும் அதிகாரத்தில் உட்கார வைக்க முடியும். அதே மக்கள் நினைத்தால், எந்தக் கட்சியையும் அதிகாரத்திலிருந்து கீழே இறக்க முடியும். இதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை.

தேர்தல் மூலமாக வழங்கப்படும் இந்த ஜனநாயக அதிகாரத்தை முறைப்படியும் பாரபட்சமற்ற வகையிலும் நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்குரியது. அதனால் தான், தேர்தல் ஆணையம் தற்சார்பு அதிகாரம் கொண்ட அமைப்பாகச் செயல்படுகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தில் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையரும், இரண்டு தேர்தல் ஆணையர்களும் இருப்பார்கள். எந்த ஒரு முக்கிய முடிவாக இருந்தாலும் இந்த மூவரும் ஒருமித்த கருத்துடன் சேர்ந்து எடுக்க வேண்டும்.

இன்று நடப்பதை அன்றே கணித்த தலைவர்!

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாகவும் தான்தோன்றித்தனமாகவும் 'எஸ்.ஐ.ஆர்.' எனப்படும் சிறப்பு வாக்காளர் சீராய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார் என்று மற்ற இரு தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் டெல்லியிலிருந்து வெளியாகும் 'தி இண்டியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் 23.9.2026 அன்று ரித்திகா சோப்ரா எழுதிய செய்திக் கட்டுரை வாயிலாக அம்பலமாகி, நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் உள்பட பல மாநிலங்களின் தேர்தல்களிலும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையால் இலட்சக்கணக்கான பேர் வாக்குரிமையை இழந்தனர். இதனால், தேர்தல் முடிவுகளிலும் எதிர்பாராத மோசமான மாற்றங்கள் ஏற்பட்டன. எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை, தேர்தலுக்கு மிக நெருக்கமாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தபோதே, அந்த நடைமுறையை எதிர்த்து ஒலித்த குரல்களில் முதன்மை யானது, ஜனநாயகக் காவலரான கழகத் தலைவர் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரலாகும்.

பீஹார் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக முஸ்லிம்கள், பெண்கள், தலித் மக்கள், ஏழைகள் உள்ளிட்டோரின் வாக்குகள் பறிபோயின. இந்த வாக்குகள் பா.ஜ.க. கூட்டணிக்கு எதிரான வாக்குகளாகத் தேர்தலில் பதிவாகும் என்பதாலேயே, ஒன்றிய பா.ஜ.க. அரசால் தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட ஞானேஷ்குமார் வேக வேகமாக எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை மேற்கொண்டு அவர்களின் வாக்குரிமையைப் பறித்தார்.

இந்தியக் குடியுரிமை அல்லாதவர்களான பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பீஹார், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் அதிகளவில் இருப்பதால் சிறப்பு வாக்காளர் சீரமைப்பு நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

"தேர்தல் ஆணையம் என்பது வாக்குரிமையை உறுதி செய்ய வேண்டிய அமைப்பே தவிர, குடியுரிமையை ஆராய்வதற்கான அதிகாரம் கொண்ட அமைப்பல்ல என்பதையும், 18 வயது நிரம்பிய ஆண்பெண் உள்ளிட்ட அனைவருக்கும் வாக்குரிமையை வழங்குவதுதான் தேர்தல் ஆணையத்தின் பணி. வாக்குரிமையைப் பறிப்பதல்ல" என்பதை உரத்துச் சொன்ன இயக்கம் தீராவிட முன்னேற்றக் கழகம். 2025ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் நாள் எஸ்.ஐ.ஆரின் உள்நோக்கம் குறித்த தனது கண்டன அறிக்கையை கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டார்.

ஜனநாயக ஆயுதமான வாக்குரிமையைப் பறிக்கும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்பு விவாதம் நடத்த வலியுறுத்தி, 2025 ஆகஸ்ட் 1ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.பி.க்களும் மற்ற எதிர்க்கட்சி எம்.பி.க்களும் மக்களவை சபாநாயகருக்கு கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். 2025 ஆகஸ்ட் 27ஆம் நாள் பீஹார் தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற 'வாக்காளர் உரிமைப் பேரணி'யில் நேரில் கலந்து கொண்டு, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளுக்குக் கண்டனத்தைத் தெரிவித்தவர் கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தேர்தல் ஆணையத்தின் கண்மூடித்தனமான செயல்பாடுகளால் வாக்காளர் பட்டியலில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. இலட்சக்கணக்கானவர்கள் வாக்களிக்க முடியாத நிலையில், தேர்தலை நடத்தினார்கள். பீஹார் மாநிலத்தில் பா.ஜ.க. கூட்டணி அரசு அமைந்தது. நினைத்தவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிய களிப்பில், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களிலும் சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வந்த நிலையில், சிறப்பு வாக்காளர் சீர்திருத்தம் எனும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை மேற்கொண்டது தேர்தல் ஆணையம்.

தமிழர்களின் வாக்குரிமையைக் காத்திட களம் கண்ட கழகம்!

குடிமக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் ஜனநாயக விரோதச் செயலை எதிர்க்கும் வகையில் 2025 அக்டோபர் 10ஆம் நாள் அண்ணா அறிவாலயத்தில் தோழமைக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த கழகத் தலைவர் அவர்கள். மழைக்காலமான நவம்பர் மாதத்தில் மக்களை அவதிக்குள்ளாக்கும் வகையில் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொள்வதில் உள்ள உள் நோக்கம் உள்ளிட்ட பலவற்றையும் இந்த ஆலோசனைக் கூட்டம் விவாதித்தது.

அதனைத் தொடர்ந்து, 2025ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாள் தமிழ்நாடு முதலமைச்சரான கழகத் தலைவர் தலைமையில் எஸ்.ஐ.ஆர். குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாக த.வெ.க. உள்ளிட்ட கட்சிகள் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தாலும், ஜனநாயகத்தில் உண்மையான நம்பிக்கையுள்ள கட்சிகள் பங்கேற்றன. கூட்டத்தில் நடைபெற்ற ஆலோசனைகளுக்குப் பிறகு, "ஜனநாயக விரோத சட்டவிரோத எஸ்.ஐ.ஆர் முயற்சிகளைத் தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்க வேண்டும். இல்லையென்றால் உச்சநீதி

கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர்

மன்றத்தில் அனைத்துக் கட்சிகள் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்படும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க.வின் ஜனநாயகக் குரல் டெல்லி முதல் தமிழ்நாடு வரை சிலருக்குக் கசந்தது. 'வாக்காளர் பட்டியல் திருத்தம்' என்பது ஒவ்வொரு தேர்தலின் போதும் மேற்கொள்ளப்படுவதுதானே, தி.மு.க இதை ஏன் எதிர்க்கிறது என சில கட்சிகள் கேள்வி எழுப்பின.

வாக்காளர் பட்டியல் திருத்தத்தின்போது, தேர்தல் பணி அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, வாக்காளர் பட்டியலில் உள்ளவர்கள் அவர்களின் முகவரியில் இருக்கிறார்களா? மாறிவிட்டார்களா? இறந்தவர்கள் யார்? எனக் கண்டறிந்து அதன்படி திருத்தம் செய்வார்கள். 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களைப் பட்டியலில் இணைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வார்கள்.

எஸ்.ஐ.ஆர். என்பது முற்றிலும் மாறுபட்ட நடவடிக்கை. தேர்தலுக்கு முன்பாக, தமிழ் நாட்டில் ஒட்டுமொத்த வாக்காளர்கள் பெயர்களும் நீக்கப்பட்டுவிட்டன. அதாவது, அத்தனை பேரும் வாக்குரிமையற்ற குடிமக்களாக்கப்பட்டனர். 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தங்களின் இருப்பை நிரூபித்து, பெயரைச் சேர்க்க வேண்டிய வகையில் படிவத்தை நிரப்பித் தர வேண்டிய நிலைமை உருவானது. தேர்தல் ஆணையம் தனது பணியை வாக்காளர்களின் மேல் திணித்தது. "வாக்குரிமையைக் காப்பாற்றுவதே பெரும்பாடு" என்ற நெருக்கடிக்குள் ளாக்கியது.

வாக்காளர் பட்டியல் திருத்தத்தை தி.மு.க. எதிர்க்கவில்லை, எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில் வாக்குரிமையைப் பறிப்பதைத்தான் எதிர்க்கிறோம் என்பதை பொதுமக்களுக்கு விளக்கிடும் வகையில் 2025 நவம்பர் 9ஆம் நாள் கழகத் தலைவர் அவர்கள் காணொலி வெளியிட்டு தெளிவுபடுத்தினார். நவம்பர் 11 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

தகுதியுள்ள ஒரு வாக்காளரின் வாக்குரிமையும் பறிபோகாமல் பாதுகாப்பதற்காக கழகத்தின் சார்பில் பொதுமக்களுக்கான சந்தேகங்களைத் தீர்க்கவும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறுவதை உறுதி செய்யவும் 080654 20020 என்ற உதவி எண்ணையும் வழங்கினார். தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்றுவதற்காக தி.மு.க.வின் சார்பில் 'வார் ரூம்' அமைக்கப்பட்டு, 234 தொகுதிகளில் ஏறத்தாழ 70ஆயிரம் வாக்குச்சாவடிகளும் கண்காணிக்கப்பட்டன.

தி.மு.க.வின் சட்டப்போராட்டத்தால் கிடைத்த உரிமை!

மக்களின் வாக்குரிமையைக் காப்பாற்றும் வகையில், தி.மு.க. அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கழகத்தின் சார்பில் எஸ்.ஐ.ஆருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள கட்சிகளும், அமைப்புகளும் வழக்குகள் தொடர்ந்தன. வழக்கு விசாரணையில், தி.மு.க தரப்பில் உச்சநீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில், எஸ்.ஐ.ஆர். பணிகளின்போது ஆதார் அட்டையை ஆவணமாக ஏற்றுக் கொள்ள அனுமதித்தனர் நீதிபதிகள்.

பீஹாரில் ஆதார் அட்டையை ஏற்றுக் கொள்ள முடியாது என நிராகரித்திருந்தது இந்திய தேர்தல் ஆணையம். நாட்டில் எல்லாவற்றுக்கும் ஆதாரை ஆதாரமாகக் கொள்ளும் நிலையில், வாக்குரிமையைத் தக்க வைக்க ஆதார் அட்டையை ஏன் ஆவணமாக ஏற்க மறுக்கிறது தேர்தல் ஆணையம் என்பதுதான் உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. தரப்பின் வாதம். அந்த வாதத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து, உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவினால், இந்தியா முழுவதும் வாக்காளர்கள் தங்கள் ஆதார் அட்டையை ஆவணமாகக் காட்டுவதற்கு வழி பிறந்தது.

"எஸ்.ஐ.ஆர். என்பது வாக்குரிமையைப் பறிப்பதற்காக இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொள்கின்ற மோசடியான செயல்பாடு" என்பதை அப்போதே எச்சரித்தவர் கழகத் தலைவர் அவர்கள். அதை தேர்தல் ஆணையத்தின் இரு ஆணையர்களும் இப்போது வெளிப்படுத்தியிருப்பதை ஊடகங்கள் அம்பலப்படுத்துகின்றன.

தாமதமாக அம்பலமாகும் மோசடிகள்!

18 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்வதற்கான படிவம் 6ல் வாக்காளரின் பெற்றோர்தாத்தா பாட்டி உள்ளிட்டவர்கள் முந்தைய எஸ்.ஐ.ஆரின் போது எந்த வாக்குச்சாவடியில் வாக்களித்தார்கள் என்பது போன்ற சிக்கலான கேள்விகள் கேட்கப்பட்டிருந்தது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரிடம் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்துவும், விவேக் ஜோஷியும் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். "அரசின் சார்பில் உரிய முறையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளாமல் இப்படிச் செய்வது சட்டவிரோதம்" என்பதை சுட்டிக்காட்டியும் அதனை அலட்சியப்படுத்தியிருக்கிறார் தலைமைத் தேர்தல் ஆணையர்.

அதுபோலவே, தொகுதி வாரியாக வாக்காளர் பட்டியலை சரிபார்க்கக்கூடிய தேர்தல் பதிவு அலுவலர்களுக்கு, உரியஆன்லைன் சாஃப்ட்வேர் வசதியை செய்து தராமல், தலைமைத் தேர்தல் ஆணையத்தின் மையப்படுத்தப்பட்ட சாஃப்ட்வேர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், வாக்காளர் பட்டியலின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட முடியாமல் இருப்பதையும் ஆணையர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அதையும் புறக்கணித்துள்ளார் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார். 10 மாதங்களில் 14 முறை இரு ஆணையர்களும் தங்கள் அதிருப்தியை வெளியிட்டும் தலைமைத் தேர்தல் ஆணையர் எதையும் கேட்கவில்லை என்பதுதான் முதன்மைக் குற்றச்சாட்டு.

தேர்தல் ஆணையமா? பா.ஜ.க அலுவலகமா?

இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையருக்கான தேர்வுக் குழுவில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியும் இடம்பெறவேண்டும் என்கிற உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்புக்கு மாற்றாக, 2023ல் சட்டத்திருத்தம் செய்யப்பட்டு, தலைமை நீதிபதிக்குப் பதில், ஒன்றிய அமைச்சர் இருந்தால் போதும் என்ற நிலையை உருவாக்கி, மூவர் குழுவில் பிரதமர்அவரது அமைச்சரவையில் உள்ளவர் ஆகிய இருவர் என்கிற பெரும்பான்மையை முன்வைத்து, குடியரசுத் தலைவரால் தலைமைத் தேர்தல் ஆணையராக்கப்பட்டவர் தான் ஞானேஷ்குமார். "பதவியேற்றது முதலே, பா.ஜ.க.வின் அலுவலகமாக தேர்தல் ஆணையத்தை மாற்றிவிட்டார்" என்ற புகார்கள் கிளம்பின.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி, முன்னாள் தேர்தல் ஆணையரும் ஒரு பக்க சார்பாகச் செயல்பட விரும்பாமல் பதவி விலகியவருமான அசோக் லவஸா உள்ளிட்டோர், "இந்திய தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் ஒருமித்த கருத்துகளின் அடிப்படையில் எடுக்கப்படவேண்டும்" என்பதையும், "இரு ஆணையர்களின் ஆட்சேபங்களையும் தலைமைத் தேர்தல் ஆணையரின் முடிவுகளையும் பொதுவெளியில் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்" என்றும் தெரிவித்துள்ளனர்.

பல கோடி வாக்காளர்களின் ஜனநாயக உரிமையைப் பறித்த தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலக வேண்டும் என்ற குரல் கழகத் தலைவரில் தொடங்கி பல தலைவர்களிடமிருந்தும் வெளிப்படுகிறது. ஞானேஷ்குமாரை கைது செய்ய வேண்டும் என்கிற குரல்களும் கேட்கின்றன. எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைளின் உள்நோக்கத்தை அன்றே உணர்ந்து எச்சரித்தார் ஜனநாயகக் காவலரான நம் கழகத் தலைவர். இன்று அது கசப்பான உண்மையாகியிருக்கிறது.

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்து செய்தது தவறானது!

தலைமைச் செயலகத்தை பட்டினப்பாக்கத்தில் கட்டக் கூடாது!

தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்!

மனித நேய ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 27 -

மனிதநேய ஜனநாயக கட்சியின் மேலிட பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் தலைவர் மு.தமிமுன் அன்சாரி MLA. தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை நிர்வாகிகள், மாவட்டங்களை நிர்வகிக்கும் மாநில துணைச் செயலாளர்கள் பங்கேற்றனர். இதில் சமீபத்தில் பொதுச்செயலாளர் M.முகம்மது நாசர் தலைமையில் ஆய்வுக் குழு தமிழ்நாடு முழுக்க கட்சி வளர்ச்சி குறித்து சுற்றுப் பயணம் செய்திருந்தது. அந்த குழுவின் அறிக்கை இக்கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டது. நிறைவாக அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்!

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் போட்டியிடும் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா ஆகியோருக்கு ஆதரவாக பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

GPay / UPI சேவைக் கட்டணம். டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளில் (GPAY/UPI) பொதுமக்களுக்கு நேரடியாகக் கூடுதல் கட்டணம் விதிக்கப்படக் கூடாது. தற்போது மத்திய அரசு, நுகர்வோருக்கு UPI பரிவர்த்தனைக்குக் கட்டணம் இல்லை என்றும், MDR அறிமுகப்படுத்தப்பட்டாலும் அது குறிப்பிட்ட வணிகப் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளது. குறிப்பாக சிறு வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் மீது பரிவர்த்தனைச் செலவு சுமத்தப்படாத வகையில் UPI கட்டண நடைமுறைகளை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தலைமை தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் கடந்த 10 ஆண்டுகளில் கடும் சர்ச்சையாகி வரும், நிலையில், தற்போது தேர்தல் ஆணையர்களிடம் கருத்து மோதல், நிர்வாக மோதலும் ஏற்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. அந்த வகையில் கடும் விமர்சனத்திற்கு ஆளாகி இருக்கும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என கூட்டம் கேட்டுக் கொள்கிறது. மேலும் தேர்தல் ஆணையர்கள் நியமனத்தில் அரசியல் சார்பற்ற சுதந்திரமும், நேர்மையும் பாதுகாத்திட வேண்டும். இதற்காக, முன்பு நடைமுறையில் இருந்த பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் கொண்ட குழு மீண்டும் அமைக்கப்பட்டு, வெளிப்படையான, நியமன நடைமுறை உருவாக்கப்பட வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

பரந்தூர் விமான நிலைய திட்டத்தை ரத்து செய்தது தவறானது. உரியவர்களிடம் நிலத்தை ஒப்படைக்க வேண்டும். பரந்தூர் விமான நிலைய நிலங்கள், பரந்தூரில் முன்மொழியப்பட்ட பசுமை விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டுள்ள நிலையில், அத்திட்டத்திற்காக ஏற்கனவே கையகப்படுத்த ப்பட்டுள்ள விவசாய நிலங்களின் எதிர்கால பயன்பாடு குறித்து அரசு தெளிவான முடிவை அறிவிக்க வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் நில உரிமையைப் பாதுகாக்கும் வகையில், கையகப்படுத்தப்பட்ட நிலங்களை அசல் நில உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

புதிய தலைமைச் செயலகம். தமிழ்நாட்டின் நிர்வாகத் தேவைகள், எதிர்கால மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் அரசு அலுவலகங்களின் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சென்னையில் தீவுத்திடல் பகுதியில் புதிய தலைமைச் செயலக வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை தமிழக அரசு விரிவாக ஆய்வு செய்து, திட்டத்தை உருவாக்க வேண்டும். மேலும் மீனவர்களின் கோரிக்கைகளை ஏற்று பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் கட்டும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

நவோதயா பள்ளிகளை திணிக்கக் கூடாது மாநில உரிமையும் இரு மொழிக் கொள்கையும் பாதுகாக்கப்பட வேண்டும் தமிழ்நாட்டில் நீண்டகாலமாக நடைமுறையில் உள்ள தமிழ்–ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கையை பாதுகாக்க வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது. நவோதயா பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை நடைமுறையில் உள்ள நிலையில், தமிழ் நாட்டின் மொழிக் கொள்கைக்கு முரணான எந்த நடவடிக்கையும் மாநில மாணவர்களுக்கு இந்தி உள்ளிட்ட பிற மொழிகளை கற்கும் வாய்ப்புகள் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். எந்த மொழியும் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. எனவே, மாநிலத்தின் கல்வி மற்றும் மொழிக் கொள்கை, மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்தை மதித்து, தமிழகத்தின் இருமொழிக் கொள்கையை பாதுகாக்க அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

சிறைவாசிகள் விடுதலை தமிழ் நாடு சிறைகளில் உள்ள 14 ஆண்டுகளைக் கடந்த ஆயுள் சிறைவாசிகளை சாதி, மத வழக்கு பேதமின்றி தமிழக அரசு முன் விடுதலை செய்ய வேண்டும் எனவும், அதுவரை அவர்களுக்கு பரோல் என்ற சிறை விடுப்பு வழங்க வேண்டும் எனவும் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்!

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!

நாள் : 01.10.2026 - (வியாழக்கிழமை)

நேரம்	ஒன்றிய / நகர / பேரூர்க் கழகங்கள்	இடம்
மாலை 5.00	மூலனூர் கிழக்கு ஒன்றியம்	நால்ரோடு (கருப்பன் வலசு)
மாலை 6.00	கொளத்துப்பாளையம் பேரூர்	கரையூர்
இரவு 7.30	தாராபுரம் மேற்கு ஒன்றியம்	அலங்கியம்

தேர்தல் பணிக்குழு
101 - தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி